# புதிய கல்விச்சீர்திருத்தத்துக்கமைவாக, முன்பள்ளி சிறாரிடத்தில் விருத்தி செய்வதற்கான தேர்ச்சிகளை அடைவதற்கான கலைத்திட்ட அமுலாக்கலும்,வளங்களின் பொருத்தப்பாடும்

**S. Diganathan[1*] and S. Athirathan[2]**
[1]*Faculty of Education, University of Colombo, Sri Lanka*
[2]*Department of Social Science Education, University of Colombo, Sri Lanka*

**ஆய்வுச் சுருக்கம்**

முன்பள்ளிக் கல்வி அனைத்துப் பிள்ளைகளுக்கும் பெறுமதி மிக்கதொன்றாகும். இக்காலப் பகுதியில் மனிதவளங்களை பயன்மிகு வகையில் விருத்தி செய்வதற்கு முன்பள்ளிக் கலைத்திட்டத்தின் பொருத்தப்பாடு, வளங்களுக்கு இடையிலான பிணைப்பு, வினைத்திறான கல்விச் செயற்பாட்டின் வெற்றியில் தங்கியுள்ளது. இந்த ஆய்வானது மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கமைய, முன்பள்ளிகளில் எதிர்பார்க்கப்பட்ட தேர்ச்சிகளை அமுலாக்கலுக்கும், வளங்களின் பொருத்தப்பாட்டுக்குமான இடைவெளிகளை கண்டறிந்து, அவற்றை நிவர்த்திப்பதற்கான பரிந்துரைகளை முன்வைப்பதுமாகும். இந்த ஆய்வானது, ஒரு ஒப்பீட்டு ஆய்வு வடிவத்தில் அமைந்த கலப்பு ஆய்வாக மேற்கொள்ளப்பட்டது. எளிய எழுமாற்று மாதிரி எடுப்பு மற்றும் படையாக்க நுட்பம் மூலம் 30 முன்பள்ளிகளிலிருந்து ஆசிரியர்கள் தலா ஒருவர் வீதமும் ஒவ்வொரு முன்பள்ளிகளிலிருந்து தலா ஐந்து மாணவர்கள் வீதம் 150 மாணவர்கள் மாதிரிகளின் பெற்றோர்கள் 150 பேரும் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். வினாக்கொத்து, அவதானிப்பு, இலக்குக்குழுக் கலந்துரையாடல் மூலம் தரவுகள் பெறப்பட்டன. ஆய்வு நோக்கங்களின் அடிப்படையில திரட்டப்பட்ட தரவுகள் விவரணப் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டது. இந்த ஆய்வின் கண்டறிதல்களாக, ஆய்வுக்குட்படுத்தப்பட்ட முன்பள்ளி பிரதேச சபைகள், தனியார், சமய நிறுவனங்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களினாலும் நிர்வகிக்கப்படுகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் குறைந்தளவு பௌதிக வசதிகளுடனேயே முன்பள்ளிகள் இயங்குகின்றன. பெருமளவான ஆசிரியர்கள் பிள்ளைவிருத்திக் கோட்பாடுகள் பற்றி அறிந்தவர்களாக உள்ளனர். கிராம முன்பள்ளிகளில் மாணவர்களின் மொழிவிருத்தி குறைவானதாகவும் உள்ளது. முன்பள்ளிகளில் இடம்பெற்ற ஆயத்தப்படுத்தல்கள் கல்விக் கோட்பாடுகளுக்குப் பொருத்தமற்றதாக அமைகின்றன. முன்பள்ளி ஆசிரியர்களில் பெருமளவானவர்கள் க.பொ.த (சா/த) வரை கற்றவர்களாக உள்ளனர். முன்பள்ளி வகுப்பறைகளில் பிள்ளைநேய விருத்திச் சூழல் காணப்படவில்லை. பிள்ளைப்பருவ விருத்தி நியமங்களுக்கு ஏற்ப அறிவாற்றல், உள இயக்கத்திறன், மனவெழிற்சிப் பண்புகள், சமூகமயமாக்கல் திறன்களை வழங்குவதில் பாரிய இடர்பாடுகள் இனங்காணப்பட்டுள்ளது. முன்பள்ளிகளில் நீர்வசதி, மின்சாரவசதி, மலசல கூட வசதியும் முழுமையாகப் பூர்த்திசெய்யப்படவில்லை. அத்துடன் கற்றலுக்கான வளங்களும், பௌதீக வளங்களும் குறைந்தளவே காணப்படுகின்றன. குறிப்பாக கிராம முன்பள்ளிகளில் கற்றலுக்கான உபகரணங்கள் பற்றாக்குறையாக உள்ளன. இவ்வாய்வு கண்டறிலூடான ஆலோசனைகளாக, கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் போதுமானளவு தரஉள்ளீடுகள், பௌதீக வளங்களை அரசு முன்னுரிமை அடிப்படையில் வழங்குதல் வேண்டும். முன்பள்ளிகள் பிள்ளைநேய விருத்திக்கேற்ப உருவாக்கப்படுதல் வேண்டும்.

**முதன்மைச் பதங்கள்:** கல்விச்சீர்திருத்தம், முன்பிள்ளைப்பருவத் தேர்ச்சி, கலைத்திட்ட அமுலாக்கல், வளங்கள்

*diganath@gmail.com

**ஆய்வு அறிமுகம்**

இலங்கையில் முன்பள்ளிகள், மழலை பள்ளிகள், நர்சரி பள்ளிகள், மொண்டிசோரி பள்ளிகள் மற்றும் முன்பிள்ளைப்பருவ விருத்தி நிலையங்கள் உள்ளிட்ட பல்வேறு வகையான முன் பிள்ளைப்பருவ கல்வி நிலையங்கள் இயங்குகின்றன. இந்த நிறுவனங்களை விபரிக்க பரவலாகப் பயன்படுத்தப்படும் சொல் முன்பிள்ளைப்பருவ விருத்தி (ECD) நிலையம் என தேசியக் கொள்கை மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்மூலம் முன்பிள்ளைப்பருவ தேர்ச்சிகள் வயதுக்கு ஏற்ற, முழு விருத்தியை வலியுறுத்தும் அடிப்படையில் கலைத்திட்டச் சட்டகம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இது முன் பிள்ளைப்பருவக் கல்விக் கலைத்திட்டச் சட்டகமாகும். முன்பிள்ளைப்பருவக் கல்வியானது சகல பிள்ளைகளுக்குமான பிறப்புரிமையாகவும், அவர்களுடைய முழுமையான ஆளுமைவிருத்திக்குரிய காலப்பகுதியாக மூன்று வயது தொடக்கம் ஐந்து வயதுவரையான காலப்குதியை முன்பள்ளிக்காலமாக வரையறுத்துள்ளன (நேஊஇ 2019). இலங்கை அரசாங்கத்தின் முன்பிள்ளைப்பருவக் விருத்திச் செயற்பாடுகள் உலகளாவிய சாசனங்கள் மற்றும் மாநாட்டு முடிவுகள் மூலம் ஏற்றுக்கொண்டுள்ளது. அதன்படி ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் சாசனம் மற்றும் அனைவருக்கும் கல்வி, டகார் கல்வி மன்ற பிரகடனம், மொஸ்கோ பிரகடனம் (2010), நூற்றாண்டு அபிவிருத்தி இலக்குகள், தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பு, தெற்காசிய சிறுவர்கள் மீதான கொழும்பு பிரகடனம் (2010) மற்றும் நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. அதனடிப்படையில் தேசிய கல்வி நிறுவகத்தினால் உருவாக்கப்பட்ட தேசிய முன்பிள்ளைப்பருவக் கல்வி கலைத்திட்ட சட்டகம். அது உலகளாவிய தரநிலைகளாலும், பிள்ளை விருத்திபற்றிய கோட்பாடுகளினாலும், தேர்ச்சி தொடர்பான கண்டறிதல்கள் மூலமும் வழிப்படுத்தப்படுகின்றது. அது இலங்கை அரசாங்கத்தின் முன்பிள்ளைப்பருவத்தில் பிள்ளைகளின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கான அதன் அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்துகின்றது.

முன்பிள்ளைப்பருவக் கல்வி கலைத்திட்டச் சட்டகமானது பிள்ளைகளின் இயக்கத் திறன்களை மேம்படுத்துதல், பிள்ளைகளின் சமூக மற்றும் மனவெழுச்சி விருத்திக்கு ஒத்துழைத்தல், தொடர்பாடல் மற்றும் ஆரம்ப எழுத்தறிவு திறன்களை விருத்தி செய்துகொள்ளல், அத்தியாவசிய கணித எண்ணக்கருக்கள், பிரச்சினை தீர்க்கும் திறன்களை விருத்தி செய்தல், பிள்ளைகளின் நுண்கலைகளை மதிப்பிடும் மனநிலையை ஊக்குவிக்கும் சூழலை வளர்த்தல், விளையாட்டு அடிப்படையிலான கற்றலையும் சமநிலைப்படுத்துவதில் அதிகமாக கவனம் செலுத்தி வருகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்பிள்ளைப் பருவக் கல்வி மிகவும் பின்தங்கியதாகவேயுள்ளது. இடைவிலகல் வீதமும் நகரப் பகுதிகளை விட கிராமப் பகுதிகளில் அதிகமாகக் காணப்படுவதாக அரசசார்பற்ற நிறுவனங்கள் மேற்கொண்ட ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் புதிய கல்விச் சீர்திருத்தத்துக்கு அமைவாக பிள்ளைகளுக்கான தேர்ச்சிகளை ஏற்படுத்துவதில் வளங்களின் பொருத்தப்பாடாகக் காணப்படுகின்றதா? என்பது பற்றிய ஆய்வு ஒன்றினை மேற்கொள்ள வேண்டிய தேவை அவசியமாகின்றது.

மட்டக்களப்பு மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் பெற்ற பயிற்சிகளிலும், கற்பித்தல் முறைகளிலும் பாரிய ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. அதனால் அவர்களது வகிபாகங்களை அறிவுறுத்தவேண்டிய உடனடித் தேவை எழுந்துள்ளதால் இவ் ஆய்வு இக் காலகட்டத்துக்கு மிகவும் இன்றியமையாததாகும்.

**ஆய்வின் நோக்கம்**

மட்டக்களப்பு மாவட்டத்தில், புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கமைய முன்பள்ளிச் சிறார்களிடத்தில் விருத்தி செய்ய எதிர்பார்க்கப்பட்ட தேர்ச்சிகளை அடைவதற்கான கலைத்திட்ட அமுலாக்கல் நிலைமையையும் அதற்கான வளங்களின் பொருத்தப்பாட்டினையும் கண்டறிதல்.

**ஆய்வின் குறிக்கோள்கள்**

1. முன்பிள்ளைப்பருவத்துக்குரிய தேர்ச்சிகளை அடைவதில் புதிய முன்பள்ளிக் கலைத்திட்ட உள்ளடக்கங்களை மதிப்பிடுதல்.
2. புதிய கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான மட்டக்களப்பு மாவட்ட முன்பாடசாலைகளின் வளநிலையைக் கண்டறிதல்.
3. முன்பிள்ளைப் பருவத்தில் அடைய எதிர்பார்க்கும் தேர்ச்சிகளை அடைந்து கொள்வதில் முன்பள்ளிகளில் நடைமுறைப்படுத்தப்படும் செயற்பாடுகளை ஆராய்தல்.
4. புதிய கல்விச்சீர்திருத்தத்துக்கு அமைய,முன்பிள்ளைப்பருவத்தில்அடைந்து கொள்ள எதிர்பார்க்கப்பட்ட தேர்ச்சிகளை விளைதிறனாக்குவதற்கான பரிந்துரைகளை முன்வைத்தல்.

**இலக்கிய மீளாய்வு**

முன்பிள்ளைப்பருவத்தில் கற்பிக்கப்படும் பாடம் பிள்ளைகளின் உடல், உள, மனவெழுச்சிக்குப் பொருந்தக்கூடியதாக இருத்தல் வேண்டும். எனவே பிள்ளை கற்றலைத் தன்னம்பிக்கையுடன் தொடர்வதற்கு செயற்பாடுகளே பிரதானமானதாகும். அதனடிப்படையில் முன்பிள்ளைக் கல்விக்கான பாடங்கள் பிள்ளைகளின் உடல், உள, மனவெழுச்சிக்குப் பொருந்தக்கூடியதாக இருத்தல் வேண்டும். ஆயினும், கலைத்திட்ட அமுலாக்கத்தின் போது கற்றல் கூறுகளுக்கிடையிலான ஒத்திசைவை ஏற்படுத்துவதற்கான வளங்களை பெறுவதில் சிக்கல்கள் காணப்படுகின்றன.

முன்பள்ளிக்கல்வியை வீட்டின் தொடர்ச்சியாக்க முன்பள்ளிகளில் பிள்ளைக்குக் கிடைக்கும் மகிழ்ச்சி மூலம் சமுகமய வாழ்விற்கான அடித்தளம் ஏற்படுகின்றது. அத்துடன் உள்ளுணர்வுகளையும், மனவெழுச்சிகளையும் வினைத்திறனுள்ளதாக வெளிப்படுத்துவதற்கும், மனதில் சமநிலையில் வைத்துக்கொள்வதற்கும் உதவுகின்றது. ஆசிரியர்கள் முறையான பயிற்சி பெற்றவர்களாக இருக்கும் போது பிள்ளைகளின் நடத்தைக்கான தூண்டலை ஏற்படுத்த முடியும். பிள்ளைகளைத் தெளிவான மனதுடன் சிந்திப்பதற்கும் நிர்ப்பந்தமின்றித் தீர்மானம் எடுப்பதற்கும் பிள்ளைகளுக்கு ஆற்றலை வழங்கமுடியும். பிரச்சினைகளைத்

தீர்க்கும்போதும் பிள்ளையிடம் அறிவுசார் ஒழுங்கு இருக்கின்றது மேற்படி கோட்பாட்டின் மூலம் பிள்ளையின் வீட்டுச்சூழலுக்கு இசைவாவே முன்பள்ளிச் சூழலை அமைத்து அதனூடாகவே பிள்ளைகளின் திறன்விருத்திச் செயற்பாடுகளை மேம்படுத்த முடியும் என மேற்குறித்த கோட்பாடு வெளிப்படுத்துகின்றது. முன்பாடசாலையானது வளப்பற்றாக்குறைகளுடன் இயங்குகின்றது. அவற்றை சரிசெய்வதற்கு பெற்றோரிடமிருந்து அறவிடும் சிறுதொகைப் பணம் போதுமானதாக இல்லை. அதனால் பிள்ளைகள் வயதுவந்தவர்களுடன் இணைந்து கற்பதற்கான பௌதீகக் சூழலை அமைப்பதில் வளங்கள் பாரிய இடைவெளியை ஏற்படுத்துகின்றன.

பிள்ளை விருத்திக்கேற்ப பொருட்களை செயற்படுவதே ஆசிரியரின் பொறுப்பாகும். ஒவ்வொரு பிள்ளைக்கும் செயற்படக்கூடிய விதத்தில் முன்பிள்ளைப்பருவக் கல்வி உருவாக்கப்பட வேண்டும். இரண்டரை வயது முதல் ஆறு வயது வரையிலான பிள்ளைகளுக்கான ஆரம்பகால பிள்ளைப் பருவ நிலையில் ஆராய்ந்து கண்டறியவும், வகுப்பு தோழர்களுடன் ஒத்துழைக்கவும், அவர்களின் கல்வியின் உரிமையைப் பெறவும் ஊக்குவிக்கின்றது. மேற்படி கோட்பாடானது செயற்பாட்டின் மூலமான முன்பிள்ளைப்பருவத் திறன்விருத்தியை மையப்படுத்துகின்றது. அவற்றை முன்னெடுப்பதற்கான தொழிற்தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் தொடர்பில் ஆராய வேண்டி தேவை ஏற்பட்டுள்ளது.

புதிய கலைத்திட்டத்தின் கீழ் எதிர்பார்க்கப்படும் முன்பிள்ளைப்பருவ திறன்கள் பிள்ளைகளால் உண்மையில் எவ்வளவு அளவிற்கு அடையப்படுகின்றன என்பதற்கான ஆதாரங்கள் குறைவாக உள்ளன. கொள்கை ஆவணங்களில் குழந்தைகள் பெற வேண்டிய திறன்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அவை நடைமுறையில் எட்டப்படவில்லை. இது பாடத்திட்டத்தின் செயல்திறனையும் அதன் நடைமுறைப்படுத்தலின் தரத்தையும் குறித்து கேள்விகளை எழுப்புகின்றது. கலைத்திட்ட பொருத்தப்பாடும் நடைமுறைப்படுத்தலுக்கிடையிலான தொடர்பு ஆராயப்படவில்லை. இவற்றுக்கிடையே ஒருங்கிணைத்து ஆய்வு செய்ய வேண்டியது தற்போது அவசியமாகும்.

இலங்கையில் ஆரம்பக் கல்வி பிள்ளைப் பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி (ECCD) கல்வி மனித வளர்ச்சிக்கு இன்றியமையாததாகக் கருதப்படுகின்றன. ஆயினும் இது தொடர்பான கொள்கைகளை ஆராய்வதில் குறைவான கவனம் செலுத்தப்படுகின்றது (UNICEF, 2019). முன்பிள்ளைப்பருவத்திற்கான தேர்ச்சிகள் மற்றும் உணர்ச்சி வளர்ச்சிக்கு ஆதரவான சூழல்கள் உருவாக்க ஆசிரியர்களின் செயற்பாடுகள் பிரதான காரணியாக கண்டறியப்பட்டுள்ளது. அதற்கு ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் கலைத்திட்ட உள்ளடக்கம் மற்றும் தேர்ச்சிகள் தொடர்பான தொழில்முறை பயிற்சி அவசியம் என்பது இனங்காணப்பட்டுள்ளது Karimova et al., 2025).

முன்பள்ளி ஆசிரியர்களிடம் தொழிற்தகைமை காணப்படும் போதே பிள்ளைகளின் இயல்புகளை அறிந்து அவர்களுக்கு முறையாக கற்பிற்க இயலுமாக இருக்கும். முன்பள்ளிப்பிள்ளைகளின் உளவியல், கல்வி கொள்கைகள், கற்பித்தல் முறைகள், கற்பித்தல் சாதனங்களைப் பயன்படுத்தும் முறை, முகாமைத்துவம்

செய்தல் இலகுவாக அமையும் (NEC, 2023). முன்பள்ளிகளில் அனைத்து பிள்ளைகளுக்கும் வாழ்க்கைத் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கு சமமான வாய்ப்பைப் பெறும் வகையில் ஆசிரியர் பிள்ளைகளின் வயதுக்கு ஏற்ற திறன்களைக் கற்பிக்கவும், பாதுகாப்பான சூழலை வழங்கவும், புதிய அனுபவங்களை ஊக்குவிக்கவும் கல்வித் திறன்களைத் வழங்கமுடியும் குறித்த ஆய்வுப்பிரதேசத்தில் கற்பிக்கும் ஆசிரியர்களின் 64.68 வீதமானோர் க.பொ.த (சா/தர) சித்தியை மட்டுமே கல்வித்தகுதியாகப் பெற்றுள்ளனர். இவர்களை விடவும் பட்டதாரிகளாக இணைந்துள்ளவர்கள் நகரப் பகுதியில் அதிக ஊதியம் பெறும் முன்பாடசாலையில் கற்பிக்கின்றனர். அதனால் தகுதியான ஆசிரியர்களைப் பெறுவதில் பாரிய தடைகள் காணப்படுகின்றன.

இலங்கையில் தரமான முன்பிள்ளைப்பருவ பள்ளி ஏற்பாடுகளை உறுதி செய்வது ஒரு முக்கிய சவாலாகும். வாசிப்பு, எழுதுதல் மற்றும் திறன்களை அடைவதில் தவறான போட்டி, பிள்ளையின் முழுமையான வளர்ச்சியில் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை. விளையாட்டு அடிப்படையிலான கற்பித்தல் மொழி வளர்ச்சியையும், கேட்கும் திறனையும், பிள்ளைகளின் கற்பனைத் திறனையும் மேம்படுத்துகிறது. குழு செயல்பாடுகள் சமூகமயமாக்கலை ஊக்குவிக்கின்றன. முக்கியமான திறன்களைக் கற்பிக்க ஆசிரியர்கள் குழு விளையாட்டுகள், பாடல்கள் மற்றும் கூட்டுத் திட்டங்களைப் பயன்படுத்துகின்றனர் (Abesooriya, 2020). இலங்கையில் முன்பிள்ளைவிருத்திப்பருவக் கல்வி தரநிலை நடைமுறைகள் ஒரே மாதிரி இல்லை. பல ஆசிரியர்கள் தொழில்முறை பயிற்சி பெறவில்லை. நகர்ப்புறம், கிராமப்புறம் மற்றும் வறிய பகுதிகளுக்கு இடையே தரம் மற்றும் வாய்ப்புகளில் வேறுபாடு பாரிய வித்தியாசத்தைக் கொண்டுள்ளன (உலக வங்கி, 2020).

பொருளாதாரீதியில் நோக்கும் போது, முன்பள்ளிக் கல்வியை நடைமுறைப்படுத்தும் செயல்முறையில் எதிர்கொள்ளப்படும் சவால்கள், வசதிகள் மற்றும் நிதி பற்றாக்குறை, தாழ்ந்த கட்டமைப்பு வசதிகள், போதிய உபகரணங்களின் இல்லாமை மற்றும் குறிப்பாக குறைந்த சமூக-பொருளாதார நிலை கொண்ட சமூகங்களில் போதிய வளங்கள் வழங்கப்படாத நிலை ஆகியவற்றுடன் தொடர்புடையவையாக உள்ளன. இதன் விளைவாக, பயனுள்ள கற்பித்தல் மற்றும் கற்றல் செயல்பாடுகளை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாத நிலை உருவாகிறது.

### *முன்பிள்ளைப்பருவ பள்ளிகளின் அமைப்பும், அவற்றின் செயற்பாட்டு நிலையும்*

பிள்ளைகளின் விருத்திக்கேற்ப செயற்பாடுகளுக்கான உபகரணங்களும் சுற்றாடலில் காணப்படல் வேண்டும். இவை நாடக ரீதியான விளையாட்டு உபகரணங்கள், புலனங்கங்களின் செயற்பாடகளுக்குப் பொருத்தமான சாதனங்கள் போன்றவற்றை உள்ளடக்கியிருக்க வேண்டும். இச்சாதனங்கள் மொழி, கணிதம், சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் போன்ற பாடங்களின் கலைத்திட்டங்களின் நோக்கங்களையும் இலக்குகளையும் அடைவதற்குத் துணைபுரிய வேண்டும்.

வெளிவிளையாட்டுப் பகுதியானது சிறார்களின் வயதுகளுக்கும் விருத்திக் கட்டங்களுக்கும் ஏற்றதாக ஒழுங்குபடுத்தப்படல் வேண்டும். வெளிவிளையாட்டுக்குரிய இடமானது உடலியக்கச் செயற்பாடுகளுக்கு பொருத்தமானதாக வடிவமைக்கப்படல் வேண்டும். மேலும் நாடக ரீதியான விளையாட்டு, கையாளும்திறன், வரைதல், அடுக்குக்கட்டைகளை அடுக்குதல் போன்றனவும் வெளிச்செயற்பாட்டில் இருக்கக் கூடியதாக இவை அமைதல் வேண்டும்.

வகுப்பறையானது பிள்ளைகள் பொருத்தமான பௌதீக வளங்களையும் தேவையான பொருட்களையும் பொருத்தமான உயரங்களையுடைய தளபாடங்கள், பிள்ளைகளின் ஆக்கங்களை காட்சிப்படத்தக் கூடிய வசதி, பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கூடிய வசதிகள், விசேட தேவையுடைய பிள்ளைகளுக்குரிய விசேட வசதிகள் என்பவற்றை முதன்மைப்படுத்தியுள்ளன.

***முன்பள்ளிக் கலைத்திட்ட உள்ளடக்கங்கள்***

செயன்முறைகள் பிள்ளைகளை மையமாகக் கொண்டதாகவும், பிள்ளை நட்புடனும், பிள்ளைகளின் உரிமைகள் மற்றும் அவர்களின் உள்ளார்ந்த கண்ணியத்தின் கொள்கைகளுடன் ஒத்துப்போக வேண்டும் (சிறுவர் உரிமைகள் சாசனத்தின் பிரிவு 29.1.2024). அதன்படி, அவை பின்வருவனவற்றை முன்னிலைப்படுத்துகின்றன. உடல் வளர்ச்சி மற்றும் ஆரோக்கியத் திறன்கள், சமூக வளர்ச்சித் திறன்கள், உணர்ச்சி வளர்ச்சித் திறன்கள், மொழி மற்றும் தொடர்புத் திறன்கள், அறிவாற்றல் வளர்ச்சித் திறன்கள், ஆரம்ப எழுத்தறிவு மற்றும் கணிதத் தயார்நிலைத் திறன்கள், ஒழுக்கம், பண்பாடு, மதிப்பீடு சார்ந்த திறன்கள், படைப்பாற்றல் மற்றும் அழகியல் திறன்கள்.

பிள்ளைப்பருவத்தில் உடல்சார் தேர்ச்சிகள் விருத்தி, தனிநபர் மற்றும் சமுகத் தொடர்புகள் விருத்தி, தொடர்பாடல் திறன்கள் விருத்தி, பகுத்தல் மற்றும் பிரச்சினை தீர்த்தல் ஆற்றல்கள் விருத்தி, ஆக்கபூர்வமான மற்றும் அழகியல் சார் ஆற்றல்கள் விருத்திகளை ஏற்படுத்தும் வகையில் கலைத்திட்டம் கட்டமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் பின்வரும் நோக்கங்களில் கவனஞ்செலுத்தப்பட்டுள்ளது: பிள்ளையின் நுண்ணறிவு, சமுக மற்றும் மனவெழுச்சி, அழகியல் உணர்வை விருத்தி, உடல்சார் வளர்ச்சியை ஏற்படுத்துதல், பிள்ளையின் கல்வி, ஒழுக்கவியல், கலாசாரம், உளவியல் வளர்ச்சி மற்றும் வீட்டிலிருந்து பாடசாலைக்குப் பயனுள்ளதாக இடம் மாறுவதற்காக நடவடிக்கைகளைத் ஒழுங்கு செய்யப்படுகின்றது.

முன்பள்ளிக் கல்வி பற்றிய தேசிய கொள்கை (2019) தேசிய கொள்கையின் அடிப்படையில் முன்பள்ளி வயதிலுள்ள பிள்ளைகள் தமது முழுமையான ஆற்றலை அடைய உதவும், சமமான கற்றல் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திகொடுத்தல், பிள்ளைகளின் அனுகூலமான விருத்தியை ஊக்குவிப்பதற்கு உயர் தரமுடைய முன்பள்ளி நிகழ்ச்சித்திட்டங்களை வசதிப்படுத்துதல் பற்றி குறிப்பிடுகின்றது. அதற்கான நடவடிக்கைகளாக இலங்கையில் முன்பள்ளி வயதிலுள்ள சகல பிள்ளைகளையும் உள்ளடக்கும் முன்பள்ளிக் கல்விக்கான நியாயமான வாய்ப்பை உறுதிப்படுத்துதல்,

இலங்கையிலுள்ள முன்பள்ளி வயதிலுள்ள சகல பிள்ளைகளுக்கும் அவர்களின் முழுமையான விருத்தி உயர் தரமான கற்றல் வாய்ப்புக்களை உறுதிப்படுத்துதல், இலங்கையில் முன்பள்ளிக் கல்வியானது வினைத்திறன் மற்றும் வகைகூறல் ஆளுகையுடன் முறைமையினூடாகவும், உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும், என்பவற்றை குறிக்கின்றது.

இலங்கையில், 2021 ஆம் ஆண்டு முன்மொழியப்பட்ட முன்பள்ளி பாடத்திட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருவனவற்றை பரிந்துரைத்துள்ளது:

1. நல்ல சுகாதாரப் பழக்கவழக்கங்கள், உடல் தகுதி மற்றும் பாதுகாப்பு போன்றவற்றின் வளர்ச்சிக்கு உகந்த சூழலை உருவாக்குதல்.

2. ஒரு விசாரிக்கும் புலனாய்வு மனம் சுற்றியுள்ள உலகத்தைப் புரிந்துகொள்ளவும், பரிசோதனை செய்யவும், அன்றாட வாழ்க்கையின் பல்வேறு நிகழ்வுகளைப் பற்றி தர்க்கரீதியாக சிந்திக்கவும் கூடிய ஒரு அத்தியாவசிய கற்றல் சூழலை உருவாக்குதல்.

3. மொழியை சரியாகக் கையாளவும், தனது கருத்துக்களை சரியாக வெளிப்படுத்தவும், கருத்துக்களைப் புரிந்துகொள்ளவும் உதவும் அடிப்படை எழுத்தறிவு திறன்களைப் பெறுவதற்கு உகந்த சூழலை உருவாக்குதல்.

தேசிய கல்வி ஆணைக்குழு (2023) பரிந்துரைத்த தேசிய கல்வி கொள்கை கட்டமைப்பு (2020-2030) முன்பள்ளிக் கல்வியின் தரங்களை மேம்படுத்த பொருத்தமானதாகவும், செயல்படுத்தக்கூடியதுமான மூலோபாய நடவடிக்கைகளையும் முன்மொழிந்துள்ளது கொள்கை கட்டமைப்பு ஆறு முக்கிய பகுதிகளில் விரிவடைந்துள்ளது. அணுகல், மற்றும் சமத்துவம் மற்றும் உள்ளடக்கம், முழுமையான உடல் வளர்ச்சி, அறிவாற்றல் மற்றும் சமூக-உணர்ச்சி மேம்பாடு, கட்டமைப்பு, செயல்முறைகள் மற்றும் விளைவுகள், தரப்படுத்தல் மற்றும் தர உறுதி, ஒழுங்குமுறை, நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம். ஒவ்வொரு முன்பிள்ளைப்பருவப் பிள்ளைக்கும் தரமான ஆரம்பகால பிள்ளைப்பருவக்கல்வியை அணுகுவதற்கும், ஒழுங்குபடுத்துவதற்கும் உரிமைகளை உத்தரவாதம் செய்வதற்கு ECCE துறைக்கான சட்ட கட்டமைப்பை இயற்றுவதை அரசு உறுதி செய்கின்றது.

முன்பிள்ளைப் பருவத்தில் கலைத்திட்டச் சட்டகத்தை நடைமுறைப்படுத்தும் போது, கணிதம், மொழி, சுற்றுச்சூழல் போன்றன தனித்துவமான விடங்களாகப் பிரிக்கப்படுவதற்குப் பதிலாக, ஒருங்கிணைந்த மற்றும் முழுமையான முறையில் வெளிப்படுகின்றது. இக் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு இவ் ஆய்வானது வடிவமைக்கப்பட்டுள்ளது.

**ஆய்வு முறையியல்**

***ஆய்வு வடிவம்***

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐந்து வலயங்களிலுமுள்ள மாநகரம், நகரம், கிராமம் என்ற அடிப்படைகளில் முன்பள்ளிகள் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டு

ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ் ஆய்வு தொகைசார் ஆய்வும், பண்புசார் ஆய்வும் கலந்த ஒரு விவரண ஆய்வாகவே மேற்கொள்ளப்பட்டது. எனினும் பண்புசார் தரவுகளும் தொகைசார் கணிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டன. முன்பள்ளிச் செயற்பாடுகளின் வினையாற்றல்கள் ஒப்பிட இணைபுசார் ஆய்வு (Correlation research) முறையியல்கள் பயன்படுத்தப்பட்டன.

### *குடித்தொகையும் மாதிரித் தெரிவும்*

ஆய்வாளரால் வலயக்கல்வி அலுவலகங்களிலுள்ள முன்பள்ளிகளுக்குப் பொறுப்பான உதவிக்கல்விப் பணிப்பாளர்களினூடாக 2025 இல் திரட்டப்பட்ட தரவுகளின்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் 511 முன்பள்ளிகளில் 26,311 மாணவர்களும் 720 ஆசிரியர்களும் காணப்பட்டனர். இக் குடித்தொகையில் 30 முன்பள்ளிகள் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டன. இதற்காக எளிய எழுமாற்று மாதிரி எடுப்பு முறை பயன்படுத்தப்பட்டது. முன்பள்ளி ஆசிரியர்கள் தலா ஒருவர் வீதம் 30 பேர் தெரிவு செய்யப்பட்டனர். ஒவ்வொரு முன்பள்ளிகளிலிருந்து தலா ஐந்து மாணவர்கள் வீதம் 150 மாணவர்கள் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். ஒவ்வொரு மாதிரிகளின் பெற்றோர்களில் தாய் அல்லது தந்தை மாதிரியாகத் தெரிவு செய்யப்பட்டனர். அந்த வகையில் பெற்றோரில் 150 பேர் தெரிவு செய்யப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர்.

### *தரவுப் பகுப்பாய்வு முறையியல்*

மட்டக்களப்பு மாவட்டத்தின் முன்பள்ளிகளில் எதிர்பார்க்கப்பட்ட தேர்ச்சி அமுலாக்கலும், வளங்களின் பொருத்தப்பாடு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு தொடர்பாக திரட்டப்பட்ட தரவுகள் SPSS பொதியில் பதிவு செய்யப்பட்டன. ஆய்வாளர் தயாரித்திருந்த அட்டவணைகளின் உதவியுடன் ஆய்வு நோக்கங்களை அடையும் வகையில் தரவுப்பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது. அவை பொருத்தமான வரிப்படங்கள், வரைபுகளாக (Diagram & Graph) வெளிப்படுத்தப்பட்டன.

ஆய்வு நோக்கங்களின் அடிப்படையில் அளவு மற்றும் பண்புசார் அடிப்படையில் திரட்டப்பட்ட தரவுகள் விவரணப் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டது. முடிவுகளின் விளக்கம் அட்டவணைகளாகவும், வரைபுகளாகவும், புள்ளி விபர வரைபுகளாகவும், விபரிப்பாகவும் சமர்ப்பிக்கப்பட்டது.

**அட்டவணை 1**

| அமைவிடம் | அரசாங்கம் | | தனியார் | | சமய நிறுவனம் | | அரச சார்பற்ற நிறுவனம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | % | பதிவு | % | | % | | % | பதிவு |
| மாநகரம் | - | - | 8.2 | 66.7 | 8.2 | 66.7 | - | - |
| நகரம் | 08.3 | 100 | 4.2 | 100 | 4.2 | 100 | - | - |
| கிராமம் | 08.3 | 100 | 4.2 | 95.8 | 4.2 | 100 | 50.2 | 100 |
| மொத்தம் | 16.6 | | 16.6 | | 16.6 | | 50.2 | |

*முன்பள்ளிகளின் அமைவிடமும், முகாமைத்துவமும்*

மேற்படி அட்டவணை 1 இல் முன்பள்ளிகளின் அமைவிடமும், முகாமைத்துவமும் என்பவற்றின் அடிப்படையில் முன்பள்ளியின் வகைப்பாடு காட்டப்பட்டுள்ளது. இவ்வாறே கல்வி கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடும் ஆசிரியர்களின் சேவைக்காலம் மற்றும் சம்பள விபரம் கீழே இட்டவணை 2 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 2**

*முன்பள்ளி ஆசிரியர்கள் தொடர்பான விபரங்கள்*

| வகை | சேவைக் காலம் | சதவீதம் | சம்பளம் | சதவீதம் |
|---|---|---|---|---|
| உயர் | 21-25 | 16.6 % | 8001 - 10000 | 8.2 % |
| சராசரியிலும் கூடுதல் | 16-20 | 20.8 % | 6001 - 8000 | 16.6 % |
| சராசரி | 11-15 | 33.6 % | 4001 - 6000 | 54.5 % |
| சராசரியிலும் குறைவு | 06-10 | 29.0 % | 2001 - 4000 | 12.5 % |

**பௌதீக வளங்கள்**

***குடிநீர், மலசல கூடம்***

மாநகரத்தில் குழாய்நீர் வசதி மாத்திரமே உள்ளது. நகரங்களிலும், கிராமங்களிலும் 80% மான முன்பள்ளிகளில் நீர்வசதியும், 65% மான முன்பள்ளிகளில் மலசல கூட வசதியும் இல்லை.

***கற்றல் உபகரணங்கள்***

முன்பள்ளிகளில் பயன்படுத்தப்படும் கற்றல் உபகரணங்கள் தொடர்பான பகுப்பாய்வில் நகர முன்பள்ளிகளிலும், கிராம முன்பள்ளிகளிலும் ஊஞ்சல், சீசோ, பாய், பொம்மைகள், வாசிப்புக்கான நூல்கள், புதிர்கள் (Puzles), ஆகியவை 60% மும் சங்கீத உபகரணங்கள், Building box, போன்றவை 80%மும் பற்றாக்குறையாக உள்ளன. கற்றலுக்கான வளங்களும், பௌதீக வளங்களும் குறைந்தளவே காணப்படுகின்றன.

***முன்பள்ளிகளின் அக, புறச் சுற்றாடல்கள்***

மட்டக்களப்பு மாவட்ட முன்பள்ளிகளின் அக, புறச் சுற்றாடல் ஒழுங்கமைப்புக் காட்டப்பட்டுள்ளது. கிராமங்களைவிட, மாநகர, நகரப்பகுதிகளில் மணல்மூலை, வாசிப்புமூலை என்பன சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. மாநகரத்தில் எந்தவொரு முன்பள்ளிகளிலும் மணல்மூலை, வாசிப்புமூலை என்பன ஒழுங்கமைக்கப்பட்டிருக்கவில்லை. கிராமங்களில் 58.3%மான முன்பள்ளிகளில் மின்சார வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. நகரங்களில் 33.3%மான முன்பள்ளிகளிலும் கிராமங்களில் 37.4%மான முன்பள்ளிகளிலும் விளையாட்டு முற்றம் இல்லை. முன்பள்ளிகளில் பெற்றோரின் எதிர்பார்ப்பிற்கேற்ப எண், எழுத்து, வாசிப்பு என்பவற்றைக் கற்பிப்பது முதிர்ச்சிக் கோட்பாட்டுக்கு எதிரானது என 50%மானவர்களும், எண், எழுத்து, வாசிப்பு என்பவற்றைக் கற்பிப்பதால் குழந்தைகள் களைப்படைந்துவிடுவர் என 37.5% மானவர்களும் தெரிவித்தனர்.

முன்பள்ளி வகுப்பறைகளைப் பிள்ளைநேய விருத்திச் சூழலுக்கு ஏற்ப மாற்றுவதற்கு முன்வைக்கப்படும் ஆலோசனைகள் தொடர்பாக வினவப்பட்ட போது அதற்கு அவர்கள் வழங்கிய பதிற்குறிகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டன.

1. வகுப்பறையைக் கவின்மிகு வகுப்பறையாக ஒழுங்கமைத்தல்.
2. விளையாட்டினூடான கற்றல் சூழ்நிலையைத் தோற்றுவித்தல்.
3. எண்ணக்கருவாக்க முறையினைக் (Conceptual Method) கற்பித்தலில் பிரயோகித்தல்.
4. மாணவ மைய அடிப்படையிலான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலமும் முன்பள்ளி வகுப்பறைகளைப் பிள்ளைநேய விருத்திச் சூழலுக்கு ஏற்ப மாற்ற முடியும் என அனைவரும் தெரிவித்தனர்.

**அட்டவணை 3**

*தேர்ச்சி விருத்திக்கான செயற்பாடுகள்*
***முன்பள்ளி ஆசிரியர்களின் தொழில் தெரிவும், அவர்கள் பெற்ற தொழில்சார் அனுபவங்களும்***

| வகை | அமைவிடம் | மிகக் குறைவு | குறைவு | சாதாரணம் | நன்று | மிக நன்று |
|---|---|---|---|---|---|---|
| உடல் விருத்தி | மாநகரம் | | | 7.7 | 38.5 | 53.8 |
| | நகரம் | | | 43.7 | 25.0 | 31.3 |
| | கிராமம் | 1.5 | 1.5 | 15.9 | 44.9 | 36.2 |
| மொழி விருத்தி | மாநகரம் | 7.7 | | | 38.5 | 53.8 |
| | நகரம் | | 12.5 | 25.0 | 43.7 | 18.8 |
| | கிராமம் | 1.5 | 2.8 | 18.9 | 44.9 | 31.9 |
| கணித விருத்தி | மாநகரம் | | | 7.7 | 15.4 | 76.9 |
| | நகரம் | | 25.0 | 12.5 | 37.5 | 25.0 |
| | கிராமம் | 1.4 | 8.7 | 23.2 | 31.9 | 34.8 |
| சுற்றாடல் விருத்தி | மாநகரம் | | 7.7 | | 23.1 | 69.2 |
| | நகரம் | | 25.0 | 18.8 | 25.0 | 31.2 |
| | கிராமம் | 1.4 | 4.8 | 25.9 | 36.0 | 31.9 |
| ஆக்கத்திறன் விருத்தி | மாநகரம் | | | 7.7 | 30.8 | 61.5 |
| | நகரம் | | 25.0 | 6.3 | 43.7 | 25.0 |
| | கிராமம் | 1.4 | 5.8 | 15.9 | 43.6 | 33.3 |
| சமூக மனவெழுச்சி விருத்தி | மாநகரம் | | | 7.7 | 38.5 | 53.8 |
| | நகரம் | | 12.5 | 37.5 | 25.0 | 25.0 |
| | கிராமம் | 2.9 | 4.4 | 21.7 | 44.9 | 26.1 |

முன்பள்ளி ஆசிரியர்கள் பெற்றுக்கொண்ட பயிற்சிகளின் காலப்பகுதிகளின்படி 6 மாதங்களுக்குக் குறைவான பயிற்சியை 28.6% மான அரசாங்க முன்பள்ளி ஆசிரியர்களும் 10%மான அரசசார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியர்களும் 10%மான தனியார் முன்பள்ளி ஆசிரியர்களும் பெற்றுள்ளனர். அதேவேளை ஒரு வருடத்துக்கு மேற்பட்ட பயிற்சியைத் தலா 57%மான முன்பள்ளி ஆசிரியர்கள் பெற்றுள்ளனர். மாநகரத்தைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியர்கள்

அனைவரும் ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட பயிற்சிகளைப் பெற்றுள்ளனர் அதிலும் 57.1% மானவர்கள் ஒரு வருடத்துக்கு மேற்பட்ட பயிற்சியைப் பெற்றுள்ளனர்.

### *தொழில் தெரிவு, தொழில்சார் அனுபவங்களும்*

மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்பள்ளி ஆசிரியர்கள் பெற்றுக்கொண்ட தொழில்சார் பயிற்சிகள் அவர்கள் மீது இடைப் பெறுமானத்துக்குச் சமமான செல்வாக்கையே செலுத்தியுள்ளன. மூன்று மாதங்களுக்குக் குறைவான பயிற்சியை 25.0%மான அரசாங்க முன்பள்ளி ஆசிரியர்களும் 8.2%மான அரசசார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியர்களும் பெற்றுள்ளனர். 4-6 மாதங்கள் வரையிலான பயிற்சியை 8.2%மான அரசசார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியர்களும் 33.3%மான மத ஸ்தாபனங்களைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியர்களும் பெற்றுள்ளனர். 7-12 மாதங்கள் வரையிலான பயிற்சியை 75%மான அரசாங்க முன்பள்ளி ஆசிரியர்களும், 83.6%மான அரசசார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியர்களும், 66.7%மான மத ஸ்தாபனங்களைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியர்களும் பெற்றுள்ளனர்.

**அட்டவணை 4**

*முன்பள்ளிகளின் பயன்படுத்தும் கற்பித்தல் முறை*

| A - பயன்படுத்தும் கற்பித்தல் முறை | | | | B - பயன்பாட்டின் அளவு % | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| இல | விபரம் | ஆம் | இல்லை | 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | மொண்டிசோரி முறை | 58.2 | 41.8 | 45.8 | - | 20.8 | 16.7 | 16.7 |
| 2 | கிண்டர்கார்டன் முறை | 37.4 | 62.6 | 66.6 | - | 12.5 | 12.5 | 8.4 |
| 3 | விளையாட்டு முறை | 91.5 | 08.5 | 16.8 | - | 16.8 | 20.6 | 45.8 |
| 4 | குழுமுறை | 95.8 | 04.2 | 04.2 | 08.4 | 08.4 | 37.4 | 41.6 |
| 5 | கலந்துரையாடல் முறை | 91.5 | 08.5 | 08.4 | 08.4 | 08.4 | 41.5 | 33.3 |
| 6 | செயற்பாட்டு முறை | 95.8 | 04.2 | 08.4 | - | 20.0 | 33.3 | 37.3 |
| 7 | வினாவிடை முறை | 87.4 | 12.6 | 16.8 | 20.6 | 16.8 | 33.3 | 12.5 |
| 8 | கதைகூறல் முறை | 95.8 | 04.2 | 04.2 | 12.5 | 12.5 | 41.6 | 29.2 |
| 9 | நாடக முறை | 79.2 | 20.8 | 29.1 | 04.2 | 08.4 | 33.3 | 25.0 |
| 10 | வெளிக்களக் கற்பித்தல் முறை | 83.4 | 16.6 | 29.1 | 12.5 | 08.4 | 25.0 | 25.0 |

### *முன்பள்ளி அமைவிடமும் கற்பித்தல் முறைகளும்*

மாநகரத்தில் இடைப்பெறுமானத்தை விடக் குறைவான அளவே மொண்டிசோரி முறையும், நாடக முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதேபோல் கிண்டர்கார்டன் முறையும் நகரம், கிராமம் ஆகியவற்றில் குறைந்தளவே பயன்படுத்தப்பட்டுள்ளன. ஏனைய முறைகள் பெருமளவுக்கு எல்லா மட்டங்களிலும் உச்ச அளவில் பயன்படுத்தப்பட்டுள்ளன. மொண்டிசோரி முறை அரசாங்க முன்பள்ளிகளிலம், சமயஸ்தாபனங்களின் கீழுள்ள முன்பள்ளிகளிலம் கூடுதலாகக்

காணப்பட தனியார் அமைப்புக்களில் இடைப்பெறுமானத்துக்குச் சமமானதாகவும் அரச சார்பற்ற நிறுவன அமைப்புக்களில் இடைப்பெறுமானத்தை விடக் குறைந்தளவிலும் பின்பற்றப்படுகின்றன. அதேவேளை கிண்டர்கார்டன் முறை எல்லா அமைப்புக்களிலும் குறைந்தளவே பின்பற்றப்பட்டுள்ளது.

**ஆய்வின் முடிவுகளும், ஆலோசனைகளும்**

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட முன்பள்ளிகள் பிரதேச சபைகளாலும், தனியாரினாலும், சமய நிறுவனங்களினாலும் அரசசார்பற்ற நிறுவனங்களினாலும் நிர்வகிக்கப்படுகின்றன. அவற்றில் முன்பள்ளிகளில் அரச முன்பள்ளி அனைத்தும் பதிவு செய்யப்பட்டவையாகும். மாநகர முன்பள்ளி பெருமளவு பணத்தை அறவிடுகின்றன. அவை வருமானத்தையே நோக்கமாகக் கொண்டுள்ளன. பெருமளவு முன்பாடசாலை ஆசிரியர்கள் 6000ற்குக் குறைவான சம்பளத்தையே பெறுகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் குறைந்தளவு பௌதிக வசதிகளுடனேயே முன்பள்ளி இயங்குகின்றன. மாநகர முன்பள்ளிகளில் அறிக்கைகள் முறையாகப் பேணப்படவில்லை. கிராமங்களில் பெருமளவு முன்பள்ளி பாதுகாப்பற்றவையாக உள்ளன. இப் பொது விபரங்கள் பெரும்பாலும் தேசிய மற்றும் பிராந்திய மட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகளோடு ஒத்துச் செல்கின்றன.

***மட்டக்களப்பு மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களிடம் காணப்படும் பிள்ளை விருத்திக் கோட்பாடுகள் பற்றிய அறிவு***

ஆய்வுக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களில் பெருமளவானவர்கள் குழந்தைகளுக்குக் கற்பிப்பதற்கு உள்ள விருப்புக் காரணமாகவே தாம் இத் தொழிலைத் தெரிவு செய்ததாகக் குறிப்பிட்டுள்ளனர். அதேபோல் பெருமளவானவர்கள் பிள்ளைவிருத்திக் கோட்பாடுகள் பற்றி அறிந்தவர்களாக உள்ளனர். அதேவேளை நேர்முகத்துக்குட்பட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர்களில் பெருமளவானவர்கள் முன்பள்ளிகளில் பிள்ளை விருத்திக் கோட்பாடுகள் பின்பற்றப்படாததால் அங்கு பரீட்சை மையம் முதன்மைப்படுத்தப்படுகின்றது எனவும் அவர்களுக்கு மேலதிக வேலைப்பழு சுமத்தப்படுகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

***முன்பள்ளி மாணவர்களின் விருத்திச் செயற்பாடுகள்***

மாநகர, கிராம முன்பள்ளிகளில் மாணவர்களின் மொழிவிருத்தி சிறப்பானதாகவும் நகரங்களில் குறைவானதாகவும் உள்ளது. இம் முடிவானது அகியோரது ஆய்வுகளுடன் ஒத்துச் செல்கின்றது. மாநகர, நகர முன்பள்ளிகளில் ஏனைய முன்பள்ளிகளை விட உடல் விருத்திச் செயற்பாடுகள், மொழிவிருத்திச் செயற்பாடுகள், கணித விருத்திச் செயற்பாடுகள், சுற்றாடல் விருத்திச் செயற்பாடுகள், ஆக்க விருத்திச் செயற்பாடுகள், சமூக மனவெழுச்சி விருத்திச் செயற்பாடுகள் ஆகிய ஆறு விருத்திச் செயற்பாடுகளும் முன்னிலையிலுள்ளன.

கிராமங்களைச் சேர்ந்த பெற்றோர்களின் கருத்துப்படி முன்பள்ளிகளில் இடம்பெற்ற முறையான ஆயத்தப்படுத்தல்கள் பொருத்தமற்றதாக அமைகின்றன. அவர்கள் முன்பள்ளி தமது பணிகளை மேலும் விரிவாக்குதல் வேண்டும் என

எதிர்பார்க்கின்றனர். குறிப்பாக முன்பள்ளிகளில் ஆங்கிலம், சிங்களம் ஆகிய பாடங்கள் கற்பிக்கப்படுதல் வேண்டும், அதிகளவு எழுத்துப் பயிற்சிகள் வழங்கப்படுதல் வேண்டும். கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்குக் கூடுதலானளவு வீட்டு வேலைகள் வழங்கப்படுதல் வேண்டும்.

எண், எழுத்து, வாசிப்பு என்பவற்றில் அதிகளவு பயிற்சி வழங்கப்படுதல் வேண்டும் என பெருமளவு மாநகர, நகரப் பெற்றோர்கள் விரும்புகின்றனர். ஆனால் முன்பள்ளிகளுக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர்களின் கருத்துக்களும் அத்துகொரள (2022) வின் ஆய்வு முடிவுடன் முரண்பட்டுச் செல்கின்றன.

### *முன்பள்ளி ஆசிரியர்களின் கல்வி, தொழில் தகைமைகள்*

மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்பள்ளி ஆசிரியர்களின் கல்வித்தகைமைகள் குறிப்பிடப்பட்ட மட்டங்களைவிடத் திருப்திகரமாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. ஆய்வுக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களில் தனியார் துறைகளில் கடமையாற்றுபவர்கள் உயர் கல்வித் தகைமைகளையும், தொழில் தகைமைகளையும் பெற்றவர்களாக உள்ளனர். இது பஞ்சலிங்கம் (2013) மட்டக்களப்பு மாட்டத்தில் மேற்கொண்ட ஆய்வுடன் ஒத்துச் செல்கின்றது. இதற்குக் காரணம் பல தனியார் முன்பள்ளி நகரப் பகுதிகளில் காணப்படுவதால் இவற்றிற்கிடையே சிறிதளவு போட்டித் தன்மையும், தமது தரம் பேணப்படுதல் வேண்டும் என்ற நோக்கமும் இருப்பதாகும்.

ஒரு முன்பள்ளி ஆசிரியர் முறைசார்ந்த நிறுவனத்தில் பயிற்சியினைப் பெறுதல் வேண்டும். என ஆய்வில் குறிப்பிடும் போதும் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களில் பெருமளவானோர் கற்பித்தலில் பயிற்சி பெறவில்லை.

### *முன்பள்ளிக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்*

முன்பள்ளி வகுப்பறைகளில் பிள்ளைநேய விருத்திச் சூழல் காணப்படவில்லை. முன்பள்ளி வகுப்பறைகளைப் பிள்ளைநேய விருத்திச் சூழலுக்கு ஏற்ப மாற்றுவதாயின் நட்புரீதியாக இணைந்த மாணவர் குழுவினை உருவாக்குதல், விளையாட்டினூடான கற்றல் சூழ்நிலையைத் தோற்றுவித்தல், மாணவ மைய அடிப்படையிலான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல், வகுப்பறையைக் கவின்மிகு வகுப்பறையாக ஒழுங்கமைத்தல். எண்ணக்கருவாக்க முறையினைக் (Conceptual Method) கற்பித்தலில் பிரயோகித்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளுவது பொருத்தமாக அமையும் என்பது கண்டறியப்பட்டுள்ளது. MWCA மற்றும் UNICEF (2023) இணைந்து நடத்திய முன்பள்ளி பற்றிய தேசிய அளவீட்டில் முன்பாடசாலை வகுப்பறைகளைப் பிள்ளைநேய விருத்திச் சூழலுக்கு ஏற்ப மாற்றுவதற்குப் பெரிதும் முயற்சித்தல் வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

### **ஆலோசனைகள்**

பௌதிக வளங்களின் பொருத்தப்பாடும், பூரணத் தன்மையும் உறுதிப்படுத்தப்பட்ட வேண்டும். கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் போதுமானளவு தர

உள்ளீடுகள், பௌதீக வளங்களை அரசு வழங்குதல் வேண்டும். முன்பள்ளி வகுப்பறைகளைப் பிள்ளைநேய விருத்திச் சூழலுக்கு ஏற்ப மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். வீட்டை ஒத்த சூழல் முன்பள்ளியில் ஒழுங்கமைக்கப்படுதல் வேண்டும். முன்பள்ளி வகுப்பறைகளாக ஒழுங்கமைக்கப்படுதல் கூடாது. முன்பள்ளிகளில் ஆசிரியர் தெரிவு, ஆசிரியர் சம்பளம்,பயிற்சி, கற்பித்தல் உபகரணங்களை வழங்குதல், போன்றவற்றில் முறைசார்ந்த பொதுத்தன்மை பேணப்படுதல் வேண்டும். முன்பள்ளிகளில் பிள்ளையின் உள, உடல் வயது மட்டத்தைத் தாண்டிய கல்வி வழங்கப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

**உசாத்துணை நூல்கள்**


Abesooriya, L. (2020). A critical evaluation of the ownership and responsibilities of early childhood care, development and education in Sri Lanka. *OUSL Journal, 15*(1), 101–126.

Abeywickrama, R. (2024). *Enhancement of early childhood education (ECE) through professional development: Sri Lankan ECE teachers' perceptions*.

Almutlaq, S., Dimitriadi, Y., & McCrindle, R. (2022). Early childhood curriculum implementation challenges: Teachers' perspectives. *Early Childhood Education Journal, 50*(4), 683–695. https://doi.org/10.1007/s10643-021-01207-4

Karimova, R., et al. (2025). Enhancing preschool educators' self-efficacy in curriculum design. *Journal of Curriculum Studies Research*.

Ministry of Women and Child Affairs. (2022). *National standards for early childhood development centers*. Child Secretariat.

National Education Commission. (2019). *National policy on preschool education*. Government of Sri Lanka.

National Education Commission. (2023). *Quality and standards of care and education provided by early childhood development centers in Sri Lanka: Current status and way forward*.

National Institute of Education. (2025). *Sri Lanka national early childhood education curriculum framework* (1st ed.). Department of Early Childhood Development and Primary Education.

UNESCO. (2016). *Early childhood care and education policies: Global review*. UNESCO Publishing.

UNICEF. (2019). *A world ready to learn: Prioritizing quality early childhood education*. UNICEF.

World Bank. (2020). *Enhancing equitable access to quality early childhood development in Sri Lanka*. World Bank Group.